மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 256 முதல் 259 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 165 மற்றும் 166 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. வரவு—செலவுத் திட்டம், 2005—2006, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய